THE WORD OF CHRIST

தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

**கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக - கொலோசெயர் 3:16**



**பிப்ரவரி 2009**


**மரம் 9**
**கனி 3**


ஆசிரியர்
**B. அர்ஜூனன்**

## நோவா – Nova



- நோவாவின் தகப்பன் லாமேக்கு - ஆதி.5:28
- இவன் நம்மைத்தேற்றுவான் என்று பெயரிடப்பட்டவன் - ஆதி.5:29
- நோவாவுக்கு கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது - ஆதி.6:8
- தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்தான் - ஆதி.6:9
- தேவன் தனக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் செய்து முடித்தான் - ஆதி.6:2
- கர்த்தருக்கு ஒரு பலிபீடம்கட்டி பலியிட்டான் - ஆதி.8:20
- நோவா வெளியே விட்ட புறா அவனுக்கு நற்செய்தியைக் கொண்டுவந்தது - ஆதி.8:11
- விசுவாசத்தினாலே தேவ எச்சரிப்பை பெற்று குடும்பத்தை இரட்சித்தான் - ஆதி.11:7
- தேவனோடே ஏனோக்கைப்போல சஞ்சரித்துக்கொண்டிருந்தான் - ஆதி.6:9
- தேவனால் அவனும் அவன் குமாரரும் ஆசீர்வாதம் பெற்றார்கள் - ஆதி.9:1







**கிறிஸ்துவின் வசனம்**
***வழங்கும்***
***தொலைக்காட்சி நிகழ்ச்சி***

தமிழன் *TV* யில் திங்கள் காலை 6.00 - 6.15
இமயம் *TV* யில் செவ்வாய் காலை 6.30 - 6.45
இமயம் *TV* யில் வியாழன் காலை 6.15 - 6.30

***ரேடியோ நிகழ்ச்சி***



இலங்கை ஆசிய சேவை *SW/25* மற்றும் 41 மீட்டரில்
ஒவ்வொரு புதன் மாலை 5.45 முதல் 6.00 மணி வரை



**கேட்டு சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்**

"Go ye into all the world, and preach the gospel to every creature"
Mark 16:15.
"The Churches Of Christ salute you" Romans 16:16

**Published by**
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

## THE WORD OF CHRIST


புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 9 பிப்ரவரி - 2009 கனி - 3


ஆசிரியருரை

## சொல்லிமுடியாத ஈவு

## Unspeakable Gift



அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபைக்கு எழுதும்போது; "தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்" என்று எழுதுகிறார் (2கொ.9:15). தேவன் நமக்கு செய்தவைகளை எண்ணிப்பார்ப்போமானால், எவ்வளவாய் நமக்கு நன்மை செய்திருக்கிறார்! அதை நினைத்து பவுல் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறார். தேவன் உங்களுக்கு செய்தவைகளை நீங்கள் எண்ணிப்பார்த்ததுண்டா? அநேக ஆசீர்வாதங்களை தேவனுடைய சமுகத்தில் பெற்றுக்கொள்கிறோம். ஆனால் அவைகளுக்கு நன்றி சொல்ல மறந்துவிடுகிறோம். தேவன் எனக்கு என்ன செய்தார்? என்று சொல்லுவீர்களானால், வேதாகமத்திற்கு உங்களுடைய கவனத்தை திருப்பிக்கொள்ளுங்கள்.

"கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு" என வாசிக்கிறோம் (எபே.2:8). பாவத்தில் கிடந்த நம்மை அவருடைய மிகுந்த கிருபையினாலே நம்முடைய விசுவாசத்தைக்கொண்டு இரட்சித்தார். நம்முடைய நற்கிரியைகளினாலே நாம் இரட்சிக்கப்படவில்லை. பிதாவாகிய தேவன் நம்மீது இரக்கங்கொண்டு தம்முடைய குமாரனை ஜீவபலியாக நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுத்து அவருடைய இரத்தத்தினாலே நம்மை மீட்டுக்கொண்டார். புதை மணலில் சிக்குண்ட ஒரு மனிதனை, அவனுடைய அபயக் குரல் கேட்டு, அவனை ஒருவர் மீட்டெடுத்தார் என்றால் அவரை அவன் மறந்து விடுவானா? தான் உயிரோடு இருப்பதே அவரால் தான் என்று மற்றவர்களிடம் சொல்லுவான் அல்லவா? எவ்வளவாய் அந்த மனிதனுக்கு அவன் நன்றியுள்ளவனாயிருப்பான் என்பதை எண்ணிப்பாருங்கள். அப்படியிருக்க நம்மை பாவத்திலிருந்து மீட்டு இரட்சித்த நம் தேவனுக்கு எவ்வளவாய்

நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம் என்பதை எண்ணிப்பாருங்கள்? இதையெல்லாம் எண்ணிப்பார்த்த அப்போஸ்தலனாகிய பவுல் அவருடைய சொல்லிமுடியாத ஈவுக்காக ஸ்தோத்திரம் செலுத்தினார். நீங்களும் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்த ஆயத்தமாகுங்கள்.

"உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவ்ராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அனுப்பினார்" (யோவா.3:17). இதை அறியாத ஜனங்கள் அவரைப்பிடித்து சிலுவையில் அறைந்து கொன்றனர். தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார் என மேலுள்ள வசனத்தில் வாசிக்கிறோம். "அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று, உலகமோ அவரை அறியவில்லை. அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை" என யோவான் குறிப்பிடுகிறார் (யோவா.1:10,11).

"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களில் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்" (எபே.1:3). ஒரு கிறிஸ்தவன் அநுதினமும் அவரால் ஆசீர்வதிக்கப்படுகிறான். சிலர் இதை மறுப்பர். நான் பல வருடங்களாக கிறிஸ்தவனாக இருக்கிறேன் இன்னும் எனக்கு பல பாடுகளும், பிரச்சனைகளும் ஓய்ந்தபாடில்லை என்று சொல்லுவார்கள். பாடுகளும் பிரச்சனைகளும் இல்லாத வாழ்க்கை கிறிஸ்தவ வாழ்க்கையில்லை என்றே சொல்லுவேன். ஏனென்றால் "அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்" என 2தீமோத்தேயு 2:12-ல் காண்கிறோம். மேலும் "ஒருவன் என்னைப் பின்பற்றி வரவிரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" என்றார் (மத்.16:24). பாடுகள் என்பது ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் கொடுக்கப்பட்ட ஒன்று. ஆவிக்குரிய ஆசீர்வாதம் என்பது கிறிஸ்துவுக்குள் வருகிறவர்களுக்கு மட்டும் கிடைக்கும் ஒரு ஆசீர்வாதம். கிறிஸ்தவர்கள் எல்லோரும் கிறிஸ்தவர்களா? இல்லையே "ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" என்ற 2கொரி.5:17-ன் படி அவருக்குள் இருக்கிறவர்களே புதிதானவர்கள். மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்ட கிறிஸ்தவர்கள். இவர்களுக்கு சகல ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் கிடைக்கின்றன. இவர்கள் நித்திய ஜீவனுக்காக நியமிக்கப்பட்டவர்கள். உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடைகின்றனர். இவர்களே இரட்சிக்கப்பட்டவர்கள். இவர்களை கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டுவருகிறார் (அப்.2:47).

தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம் என்று பவுல் சொல்வதற்கு பல காரணங்கள் உண்டு. அவைகளில் சில. "சகோதரரே, ஆசியாவில் எங்களுக்கு நேரிட்ட உபத்திரவத்தை நீங்கள் அறியாதிருக்க எங்களுக்கு மனதில்லை. என்னவெனில், பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகத்தக்கதாக, எங்கள் பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் எங்களுக்கு உண்டாயிற்று. நாங்கள் எங்கள்மேல் நம்பிக்கையாயிராமல், மரித்தோரை எழுப்புகிற தேவன்மேல் நம்பிக்கையாயிருக்கத்தக்கதாக, மரணம் வருமென்று நிச்சயித்திருந்தோம். அப்படிப்பட்ட மரணத்தினின்றும் அவர் எங்களைத் தப்புவித்தார், இப்பொழுதும் தப்புவிக்கிறார், இன்னும் தப்புவிப்பார் என்று அவரை நம்பியிருக்கிறோம்" என்று சொல்கிறார் (2கொரி.1:8-10). அவர்களுடைய நம்பிக்கை அற்றுப்போகத்தக்கதான சோதனை வந்தது, ஆனால் அந்த சோதனையில் வெற்றி கொண்டார்கள். எப்படி? மரித்தோரை எழுப்புகிற தேவனின் மீது தங்களுடைய விசுவாசத்தை வைத்தார்கள் என காண்கிறோம். இன்றைக்கு அநேகர் கிறிஸ்தவ ஜீவியத்தில் வீழ்ந்துபோகிறார்கள் காரணம் என்ன? தன்னுடைய சுயபெலத்தின் மீது நம்பிக்கை வைத்து அல்லது மனிதன் மீது தன் நம்பிக்கையை வைத்து கடைசியில் அவன் என்னை கைவிட்டான். நான் அவனை முழுவதும் நம்பியிருந்தேன் எனக்கு நம்பிக்கை துரோகம் செய்துவிட்டான் என்று புலம்புவார்கள். "மனுஷன்மேல் நம்பிக்கைவைத்து, மாம்சமானதைத் தன் புயபலமாக்கிக்கொண்டு, கர்த்தரை விட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" மேலும் "கர்த்தர்மேல் நம்பிக்கைவைத்து, கர்த்தரையே தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான்" என எரேமியா தீர்க்கதரிசன புத்தகத்தில் வாசிக்கிறோம் (எரே.17:5-7). உங்களுடைய நம்பிக்கை எப்படிப்பட்டது? பவுலைப்போல மரித்தோரை உயிரோடு எழுப்பும் தேவன்மீது உங்களுடைய நம்பிக்கையை வையுங்கள்.

பவுலை தம்முடைய ஊழியத்திற்கு அழைத்த கர்த்தர் அவனை கைவிடவில்லை. அவ்வப்போது தேற்றிக்கொண்டே வந்தார். ஒரு முறை பவுல் கொரிந்து பட்டணத்தில் இருக்கையில் "இராத்திரியிலே கர்த்தர் பவுலுக்குத் தரிசனமாகி: நீ பயப்படாமல் பேசு, மவுனமாயிராதே; நான் உன்னுடனேகூட இருக்கிறேன், உனக்குத் தீங்குசெய்யும்படி ஒருவனும் உன்மேல் கைபோடுவதில்லை, இந்தப் பட்டணத்தில் எனக்கு அநேக ஜனங்கள் உண்டு என்றார். அவன் ஒரு வருஷமும் ஆறு மாதமும் அங்கே தங்கி, தேவவசனத்தை அவர்களுக்குள்ளே உபதேசம்பண்ணிக்கொண்டுவந்தான்" (அப்.18:9-11). இவ்விதமாக அப்போஸ்தலனாகிய பவுலை கர்த்தர் அவருடைய ஊழியத்தில் அற்புதவிதமாக பயன்படுத்திவந்தார்.

துரோவா பட்டணத்தில் கூடிவருகிற சபையில் பவுல் நெடுநேரம் பிரசங்கம் பண்ணிக்கொண்டிருக்கையில், மிகுந்த தூக்கமடைந்து, நித்திரைமயக்கத்தினால் ஐத்திகு என்ற வாலிபன் மூன்றாம் மெத்தையிலிருந்து கீழே விழுந்து, மரித்தவனாய்

எடுக்கப்பட்டான். உடனே பவுல் இறங்கிப்போய், அவன்மேல் விழுந்து, அவனை அணைத்துக்கொண்டு; கலங்காதிருங்கள், இவன் உயிர் இவனுக்குள் இருக்கிறது என்றான். அந்த வாலிபனை அவர்கள் உயிருள்ளவனாகக் கூட்டிக்கொண்டுவந்து, மிகுந்த ஆறுதலடைந்தார்கள். இப்படியாக அப்போஸ்தலனாகிய பவுலுடைய ஊழியத்தில் தேவன் அநேக அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தார். ஆனபடியினாலே பவுல், தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம் என்று எழுதுகிறார். பவுலுக்கு மாத்திரமல்ல அவனோடு இருந்தவர்களில் எப்பாப்பிராவுக்கும் தேவன் இரங்கினார். அவனைப் பற்றி பிலிப்பிய சபையாருக்கு எழுதிய நிருபத்தில் "அவன் வியாதிப்பட்டு மரணத்திற்குச் சமீபமாயிருந்தது மெய்தான், ஆகிலும், தேவன் அவனுக்கு இரங்கினார்; அவனுக்கு இரங்கினதுமல்லாமல், துக்கத்தின்மேல் துக்கம் எனக்கு உண்டாகாதபடிக்கு, எனக்கும் இரங்கினார்" என எழுதுகிறார் (பிலி.2:27). இவைகளையெல்லாம் பவுல் எண்ணிப்பார்க்கத் தவறவில்லை. பவுலுக்கும் சரீரத்தில் போராட்டம் இருந்தது, பிரச்சனைகள் இருந்தது. இதற்காக மூன்றுதரம் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொண்டார் அதற்கு அவருக்கு கிடைத்த பதில் " என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார்" (2கொரி.12:9).

இச்செய்தியை வாசிக்கின்ற அன்பான வாசகரே, கிறிஸ்தவ சகோதரனே, சகோதரியே, தேவனுடைய ஜனங்களே உங்களுடைய வாழ்க்கையில் தேவனாகிய கர்த்தர் எவ்வளவோ பெரிய காரியங்களை செய்திருக்கிறார். அவைகளை சொல்லால் சொல்லிவிடமுடியாது அத்துனை காரியங்களையும் நம்முடைய கர்த்தர் செய்திருக்கிறார். உங்களால் இவைகளை மறக்கவும் முடியாது மறுக்கவும் முடியாது. ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் கர்த்தர் அற்புதமான காரியங்களை செய்திருக்கிறார், செய்துகொண்டும் வருகிறார். நாம் இம்மட்டும் இருப்பதே அவருடைய சுத்த கிருபை என்றே சொல்லவேண்டும். நான் இன்னும் அவரை அறியவில்லையே பின்பு எப்படி எனக்கு தேவன் நலமாக காரியங்களை செய்திருக்க முடியும் என்பீர்களாகில், சற்று கவனியுங்கள். உங்களை தேவனாகிய கர்த்தர் உண்டாக்கினார். சரீரத்தில் ஒரு பகுதி செயல் இழந்து விட்டால் மனிதன் பார்க்காத வைத்தியர் இல்லை என்றே சொல்லவேண்டும். இப்படிப்பட்ட சமயத்தில் தன்னை உண்டாக்கின தேவனை மனிதன் தேடஆரம்பிக்கின்றான். நீங்கள் ஆரோக்கியமாக இருக்கும்போதும் அவரை நினைக்க வேண்டும். ஏனென்றால் அவர் உங்களை உண்டாக்கினார். இன்று இருப்பதே அவருடைய கிருபையால் இருக்கின்றோம். நாளைக்கு நடப்பது நமக்குத் தெரியாது. ஒரு நாள் பிறப்பதை அறியாயே என வேதம் நமக்குப் போதிக்கிறது. இம்மட்டும் நம்மை சுகத்தோடும் பெலத்தோடும் வைத்த தேவனுக்கு நாம் நன்றி சொல்லவேண்டியவர்களாக இருக்கிறோம். "நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர்; வானங்கள் உம்முடைய கரத்தின் கிரியையாயிருக்கிறது... நீரோ மாறாதவராயிருக்கிறீர்; உமது

ஆண்டுகள் முடிந்துபோவதில்லை" என சங்கீத புஸ்தகத்தில் வாசிக்கிறோம் (சங்.102:26-27).

மரணப்படுக்கையில் கிடந்தவர்களை கர்த்தராகிய தேவன் தூக்கி நிறுத்தியிருக்கிறார். கடன் பிரச்சனையில் தவித்தவர்களை கடனிலிருந்து விடுவித்திருக்கிறார். கட்டுண்டவர்களை கர்த்தர் விடுதலைசெய்திருக்கிறார். பேதைகளை ஞானிகளாக மாற்றியிருக்கிறார். அவர் என்றைக்கும் ஜீவிக்கிறவர். மோசேயினிடத்தில் இருக்கிறவராக இருக்கிறேன் என்பவர் என்னை உங்களிடத்துக்கு அனுப்பினார் என்று இஸ்ரவேல் புத்திரரோடே சொல்வாயாக என்று சொல்லி அனுப்பினார். நமது ஆண்டவரும் "மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன்" என்று திருவுளம்பற்றுகிறார் (வெளி.1:18).

முதல் நூற்றாண்டு காலத்தில் இயேசுவின் அற்புதத்தை கண்ணார கண்டவர்கள் அவைகளைக் குறித்து சாட்சியிடுகிறார்கள். யோவான் "தேவனுடைய வசனங்களைக் குறித்தும், இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சாட்சியைக்குறித்தும், தான் கண்ட யாவற்றையும் சாட்சியாக அறிவித்திருக்கிறான்" (வெளி.1:2). மேலும் தான் எழுதின சுவிசேஷபுத்தகத்தில் "இயேசு செய்த வேறு அநேக காரியங்களுமுண்டு; அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் புஸ்தகங்கள் உலகம் கொள்ளாதென்று எண்ணுகிறேன். ஆமென்." என்று எழுதியிருக்கிறான் (யோவா.21:25). இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். அவர் பாவிகளை இரட்சிக்க உலகத்திற்கு கடந்து வந்தார். தேவன் அவரை முன்குறித்திருக்கிறார். "இவரோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறபடியினாலே, மாறிப்போகாத ஆசாரியத்துவமுள்ளவராயிருக்கிறார். மேலும், தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்" (எபி7:24,25).

பிதாவாகிய தேவன் நமக்கு செய்த சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரத்தை ஏறெடுப்போம்.


## பொது அறிவுக் களஞ்சியம்

### இந்திய வங்கிகள்

முதன் முதலில் 1934–ம் ஆண்டுதான் நம்நாட்டில் வங்கிகள் வேலைசெய்யும் முறை ஒழுங்குபடுத்தப்பட்டது. இந்திய ரிசர்வ் வங்கி 1935–ம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்த மத்திய வங்கியின் முக்கிய வேலைகள் மற்ற வர்த்தக வங்கிகளின் முக்கிய வேலைகள், நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவது, சீராக்குவது. அன்னியச் செலவாணியை ஒழுங்கு படுத்திக் காப்பது, விவசாயத்திற்குத் தேவையான கடனுதவி அளிக்க ஏற்பாடு செய்தல் முதலியன ஆகும்.

# இயேசுகிறிஸ்து
# JesusChrist

*-J.C.Choate*



இயேசுகிறிஸ்துவைப் பற்றி நீங்கள் கேள்விப் பட்டிருக்கிறீர்களா? அப்படி யென்றால், அவரைக் குறித்து எவ்வளவு தூரம் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்? அவர் தம்மை தேவனுடைய குமாரன் என்று கூறியதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் அவருக்குக் கீழ்ப்படிந்திருக்கிறீர்களா?நீங்கள் ஒரு கிறிஸ்தவனாகவும், அவருடைய சபையின் அங்கத்தினனாகவும் இருக்கிறீர்களா?

இயேசுகிறிஸ்து வாழ்ந்தார் என வேதாகமம் மட்டும் கூறவில்லை, ஆனால் வரலாறு முதற்கொண்டு இதை உண்மையென உறுதிப்படுத்துகிறது. நமது நாட்காட்டியும் கூட **B.C.** என்பது கிறிஸ்துவுக்கு முன் எனவும் **A.D.**என்பது கிறிஸ்துவுக்குப்பின் எனவும் அறிவிக்கிறது. இயேசு வாழ்ந்தார் என்பதும் தொடர்ந்து ஜீவித்து வரலாற்றை மாற்றுகிறார் என்பதும் உண்மையாகும். கலை, இசை, சட்டம், அறிவியல் மேலும் நம்முடைய ஒவ்வொரு கலாச்சாரமும் இயேசு கிறிஸ்துவின் ஜீவியத்தினால் மாற்றம் அடைந்திருக்கிறது. இந்தக் காரியங்கள் கிறிஸ்து வாழ்ந்தார் என்ற உண்மைக்குச் சான்றுகளாக இருக்கின்றன.

தேவன் உலகத்தை சிருஷ்டித்தபோது ஆதியாகம புத்தகத்தில் முதன்முறையாக கிறிஸ்துவைக் குறித்து வாசிக்கின்றோம். மனிதனுடைய சிருஷ்டிப்பின் விஷயத்தில் "பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின் படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார்; அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்" (ஆதி.1:26,27). என வாசிக்கின்றோம். தேவன், "மனுஷனை உண்டாக்குவோமாக ..." என்று சொன்னதைக் கவனியுங்கள். படைப்பில் உடனிருந்த இன்னொரு நபர் யார்? அந்த நபர் கிறிஸ்துவே என வேதவாக்கியம் திரும்பத் திரும்பக் குறிப்பிடுகிறது. தேவன் எல்லாவற்றையும் இயேசு கிறிஸ்து மூலமாய் சிருஷ்டித்தார் (எபே.3:9) என புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறான். மீண்டும், பவுல் கிறிஸ்துவைக் குறித்துப் பேசி, "ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும், பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும் அவருக்கென்றும்

சிருஷ்டிக்கப் பட்டது"(கொலோ1:16) என அறிவிக்கிறான். கிறிஸ்துவைப்பற்றி யோவான், "சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை" (யோவா.1:3) என்கிறான்.

வேதாகமத்தின் பழைய ஏற்பாடு முழுவதிலும், மீண்டும் மீண்டும் கிறிஸ்துவினுடைய பிரசன்னத்தைப் பற்றி நாம் வாசிக்கிறோம். அவர் கிறிஸ்து என்றும் இயேசு கிறிஸ்து என்றும் பேசப்படவில்லை, ஆனால் அவர் உறுதியாக ஒரே நபராக அடையாளப்படுத்தப்படுகிறார். உதாரணமாக, யாத்திராகமம்3:13,14-ல், "கர்த்தருடைய தூதன் மோசேக்கு எரிகின்ற ஒரு முட்செடியில் தரிசனமாகி, சொல்லுகையில், அவர் தேவனாக அடையாளப் படுத்தப்படுகிறார் மேலும் தம்மை **"இருக்கிறேன்"** என அழைக்கிறார். யோவான்8-ல், இயேசு அந்த நாமத்தை தமக்கே பயன்படுத்தினார். யாத்.32:34,மேலும் தொடந்து 33-ம் அதிகாரமும் கர்த்தர் இஸ்ரவேலருக்கு முன்பாக எகிப்திலிருந்து அவர்களுடைய பயணத்தில் என்னுடைய தூதனை அனுப்புவேன் என வாக்களிக்கின்றதைக் காட்டுகிறார். 1கொரி.10:1-4 இஸ்ரவேல ரோடே கூடச் சென்றவர் கன்மலையாகிய இயேசு கிறிஸ்து என அடையாளப்படுத்தபடுகிறது, நியாயா.2:1, "எகிப்திலிருந்து உங்களை புறப்படப்பண்ணினவராகிய" அவர் "கர்த்தருடைய தூதன்" என அடையாளங் காட்டுகிறது. யாத்.14:19, நியாயா.13:6,9, 2சாமு.14:17,20, நியாயா2:1, ஏசாயா63:9, யாத்.2, ஏசாயா63:7-10 போன்ற வசனங்களைப் பாருங்கள்.

பழைய ஏற்பாட்டின் பல பகுதிகள் தேவனைக் குறித்து பேசுகின்றன, ஆனால் புதிய ஏற்பாட்டில் ஆவியின் தூண்டுதலினால் கிறிஸ்துவைக் குறிக்கின்றது, அவைகள்: ஏசா40:3, மத்.3:3, யோவா.1:29, சங்.24:9,10, மற்றும் 1கொரி.2:8,யாக்.2:1, ஏரே.23:5, மேலும் 1கொரி.1:30, ஏசா.8:13,14, மேலும் 1பேது.2:7,8, சங்.110:1, அப்.2:34-36, மல்.3:1, லூக்.1:76, யோவா.1:30, யோவேல்2:32, 1கொரி.1:2, சங்.45:1,6,7, எபி.1:8, சங்.102:25-27, எபி.1:10, ஏசா.52:4, மற்றும் 1பேது.1:10 பேன்றவைகள் ஆகும்.

மத்தேயு1:18-25-ல் "இயேசு கிறிஸ்துவின் ஜெநநத்தின் விவரமானது: அவருடைய தாயாகிய மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கையில், அவர்கள் கூடிவருமுன்னே, அவள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள் என்று காணப்பட்டது. அவள் புருஷனாகிய யோசேப்பு நீதிமானாயிருந்து அவளை அவமானப்படுத்தமனதில்லாமல், இரகசியமாய் அவளைத் தள்ளிவிட யோசனையாயிருந்தான். அவன் இப்படிச் சிந்தித்துக்கொண்டிருக்கையில், கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் அவனுக்குக் காணப்பட்டு: தாவீதின் குமாரனாகிய யோசேப்பே, உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக்கொள்ள ஐயப்படாதே; அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது. அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை

இரட்சிப்பார் என்றான். தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தராலே உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது. அவன்: இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்குத் தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம். யோசேப்பு நித்திரைதெளிந்து எழுந்து, கர்த்தருடைய தூதன் தனக்குக் கட்டளையிட்டபடியே தன் மனைவியைச் சேர்த்துக்கொண்டு; அவள் தன் முதற்பேறான குமாரனைப் பெறுமளவும் அவளை அறியாதிருந்து, அவருக்கு இயேசு என்று பேரிட்டான்". இச்சம்பவத்தை நீங்கள் லூக்1 மற்றும் 2-ல் காணலாம்.

பழைய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் வருகையைக் குறித்தும் அவருடைய ராஜ்யத்தைக் குறித்தும் பல தீர்க்கதரிசனங்கள் உள்ளன. தானியேல், "அந்த ராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார்; அந்த ராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை; ஒரு கல் கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து, உருண்டு வந்து, இரும்பையும் வெண்கலத்தையும் களிமண்ணையும் வெள்ளியையும் பொன்னையும் நொறுக்கினதை நீர் கண்டீரே, அப்படியே அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும்"(தானி2:44) என்றான். மத்தேயு3:1-3க்குச் செல்கையில், "அந்நாட்களில் யோவான்ஸ்நானகன் யூதேயாவின் வனாந்தரத்தில் வந்து, மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கம் பண்ணினான். **கர்த்தருக்கு வழியை ஆயத்தப் படுத்துங்கள்; அவருக்குப் பாதைகளைச் செவ்வைபண்ணுங்கள் என்று வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் உண்டென்று**, ஏசாயா தீர்க்கதரிசியினால் சொல்லப்பட்டவன் இவனே" என்கிறான். கிறிஸ்து மத்.16:17,18-ல் அவர் தம்முடைய சபையை அல்லது ராஜ்யத்தைக் கட்டப்போவதாகச் சொன்னார் மேலும் கொலோ.1:13,14-ல் இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம் என்றான். தீர்க்கதரிசிகளால் உரைக்கப்பட்டதும், என்றென்றும் நிலைத்திருக்கும்படி வரப்போகின்ற ராஜ்யமாகிய சபையைக் குறித்து இங்கு பவுல் பேசுகின்றான்.

மத்தேயு, மாற்கு, லூக்கா, மற்றும் யோவானில் நாம் இயேசுவின் வாழ்க்கையைப் பற்றி வாசிக்கையில், அவர் சோதிக்கப்பட்டார் ஆனால் அவர் ஒருபோதும் பாவஞ்செய்யவில்லை என அறிவுறுத்தப்படுகிறோம். அவர் தேவனிடத்திலிருந்து வந்தவர் என நிரூபிக்கும்படி பல அற்புதங்களை நடப்பித்தார். அவர் வியாதியஸ்தரை குணமாக்கினார், பிசாசுகளை துரத்தினார், மரித்தோரை உயிர்ப்பித்தார். நிக்கொதேமு இயேசுவினிடத்தில் வந்து, "ரபீ, நீர்

தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான் என்றான்"(யோவா.3:2) என யோவான் கூறுகிறான்.

இயேசு ஒரு குற்றமற்ற ஜீவியம் ஜீவித்தபோதும் மனிதனை இரட்சிக்க வந்த போதும், அவருக்குப் பகைவர்கள் இருக்கத்தான் செய்தார்கள் அவரை விசுவாசியாதவர்களும் அவரிடம் பொறாமை கொண்டவர்களும் அங்கிருந்தார்கள். யூத மதத்தலைவர்களும் கூட அவரைப் புறக்கணித்தார்கள், ஏனென்றால் அவர் 'ராஜா' வம்சத்தை சேராதவர் என தங்கள் மனதில் எண்ணி அவரைப் பின்பற்றுகிறவர்களைக் குறித்து அவர்கள் பொறாமை கொண்டார்கள். இவையெல்லாமே மத்தேயு26-28-ல் எழுதப்பட்டுள்ளபடி அவருடைய சிலுவை மரணத்திற்கு அவரை இட்டுச்சென்றது. ஆனால் அவர் சிலுவையின் மேல் மரித்து அடக்கம் செய்யப்பட்டபோதிலும், அவர் வாக்களித்திருந்தபடியே கல்லறையிலிருந்து மூன்றாம் நாள் உயிரோடெழுப்பப்பட்டார். இது மத்தேயு26-28-லும் மேலும் மற்ற பல வேதாகமப் பகுதிகளிலும் எழுதப்பட்டுள்ளது. அதன்பிறகு சில நாட்கள் கழித்து அவர் ராஜாதிராஜாவாகவும் கர்த்தாதி கர்த்தராகவும் அரசாளும்படி பிதாவினிடத்திற்கு பரலோகத்திற்கு ஏறெடுத்துக் கொள்ளப்பட்டார் (அப்.1:7-11).

ஆனால் இதுவே இந்த சங்கதியின் முடிவல்ல. இயேசு உலகத்தின் பாவங்களுக்காக மரித்திருக்கையில், இன்றும் கூட அவரிடத்தில் விசுவாசம் வைத்து அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிகிறவர்களை இரட்சிக்கிறார் (யோவா.3:16,17: மாற்16:16, அப்.2:38,47). அவர் விசுவாசமுள்ளவர்களை, அவரோடுகூட என்றென்றும் அவர்கள் வாழப்போகின்ற பரலோகத்திற்கு எடுத்துச்செல்ல மறுபடியும் வரப்போவதாக வாக்களித்திருக்கிறார்(வெளி.222:14; வெளி.2:10).

நீங்கள் இவ்வுலகத்திலும் வரப்போகிற உலகத்திலும் இரட்சிக்கப்பட்டிருக்கும்படி கிறிஸ்துவைப் பற்றி வாசித்துக் கற்றுக்கொள்ளும்படிக்கும், அவரிடத்தில் விசுவாசம் கொள்ளும்படிக்கும், அவருடைய சித்தத்திற்குக் கீழ்படியும்படிக்கும் நீங்கள் உற்சாகப்படுத்தப்படுகிறீர்கள்.



## ஜெபியுங்கள்

3000 வாசகர்களுக்காக,
வானொலி, தொலைக்காட்சி, இலக்கிய பணிக்காக,
புதிய விசுவாசிகளுக்காக,
ஊழியங்களை தாங்குகிற தேவபிள்ளைகளுக்காக,
புதிதாக துவங்க இருக்கிற ஊழியங்களுக்காக,
கிறிஸ்தவ ஐக்கியத்தின் ஒருமைப்பாட்டிற்காக...



பெண்கள் பகுதி

# தேவன் - God?

# அவருடைய சமூகம் நிலைத்திருத்தல்

# The Persistence of His Presence

*-Betty*



**நான் ஒரு மனுஷியாக இருக்கிறேன்.** எவ்வளவு முக்கியமானவள் நான்! என்னுடைய முழு உலகத்தின் மையம் நானே. நான் ஒவ்வொரு நபரையும் ஒவ்வொரு பொருளையும் எனக்கு உறவாயிருக்கின்றவர்களுடைய மற்றும் எனக்கு முக்கியமாயிருக்கின்றவற்றுடைய நோக்கு நிலையிலிருந்து பார்க்கின்றேன். நான் உண்மையுள்ளவள்; உண்மை என்னுடைய சொந்த நினைவுகள், உண்மை என்னுடைய சொந்த அனுபவங்கள்.

**நான் ஒரு மனுஷியாக இருக்கிறேன்.** எவ்வளவு அற்பமானவள் நான்! நான் எத்திக்கிலும் எனக்கு முன் வானத்தைத் தொடும் பூமியின் எல்லைகளைக் காண்கிறேன். நான் மலைகளின் மிகப் பிரமாண்டமான உயரத்தினைக் காண்கிறேன். நான் தொடுவானத்தில் ஒளிவீசுகின்றதான கடலைக் காண்கிறேன். நான் இருண்ட வானங்களினுள் எட்டாத தூரத்திலிருக்கும் பரந்து விரிந்துள்ள விண்வெளியை என் கண்ணுக்கு எட்டியதூரம் வரை காண்கிறேன். எனக்கு முன் லட்சக்கணக்கானவைகள், உயிர்வாழ் வனவற்றோடு ஒப்பிடுகையில் என்னுடைய சிறுமையும் அற்பமுமானவற்றோடு, இந்த அண்டசராசரங்களை சிருஷ்டித்து நிலைநிறுத்திய இருக்கிறவரும் பயங்கரமானவருமான ஒருவருடைய அவசியத்துடன் என்னுடைய ஆன்மா தாக்கம் அடைந்திருக்கிறது.

எனக்குள் கட்டுக்கடங்காத விசாரங்கள் பெருகிறது, "மனுஷனை நீர் நினைக்கிறதற்கும் மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம்?......." (சங்.8:4).

**அவர் ஜீவிக்கிறவர் என்ற அவருடைய சமூகத்தை மறுப்பதற்கு மாறாக அவருக்காக மரிப்போம்** என தேவனிடத்தில் ஆழமான விசுவாசமுள்ள மனுஷர் அநேகர் உண்டு.

**சண்டையிட்டுக் கொண்டும் தீவிரமாக தேவன் இல்லையென அறிவித்துக்கொண்டும் அவருடைய மகிமையுள்ள நாமத்தினைத் தூஷிக்கிற மற்ற மனிதர்கள் உண்டு.**

ஆனால் தெளிவான உண்மை என்னவென்றால், ஒரு ஆத்துமாகூட தேவனுடைய முகத்தைக் கண்டிராதபோதும், ஒவ்வொரு சமூகத்திலும், ஒவ்வொரு காலத்திலும், புவி வரலாற்றில் ஒவ்வொரு பெரிய நிகழ்வுகளிலும் அண்ட

சராசரங்களில் வியாபித்திருக்கிறவராக இருக்கிறவர் அவர் ஒருவரே! என்றென்றும் வாழ்ந்திராத ஒவ்வொரு ஆத்துமாவும் சந்திக்கவேண்டிருக்கிற அவருடைய சமூகம், ஒரு வினாவும் விடையுமாயிருக்கிறது. அந்த உண்மை, தனக்குள்ளாக, பிரமிக்கத்தக்கவகையில் நிரம்பியுள்ளது.

**ஆழமாய் இதனை சிந்தித்துப்பார்:** அனைத்துக் கலாச்சாரங்கள், மக்கள், சவால்கள், சந்தர்ப்பங்கள், விருப்பங்கள், ஆபத்துகள் மேலும் பயங்கள் இவற்றோடு இன்று வாழ்கின்ற கோடிக்கணக்கானோர் மத்தியில் - மற்றும் என்றென்றும் வாழ்கின்றவர்கள் மத்தியில் (சரீர ஜீவியத்திற்கு அவசியமானவற்றிற்கு அப்பால்): **தேவன் ஒருவர் உண்டா?** என்ற ஒரே ஒரு கேள்வி எல்லா மனிதருக்கும் பொதுவானதாக இருக்கிறது.

அவருடைய சமூகம் நிலைத்திருத்தல் என்பது அவர் உண்மையானவர் என மனிதர்களுடைய உள்ளங்களில் அவருடைய சமூகம் நிலைத்திருத்தல் என்பதே நிறைவான சான்றாயிருக்கிறது. புராதன மூட நம்பிக்கையின்படி அவர் ஒரு கற்பனைப் பொருளாக இருந்தாரானால், மனிதவர்க்கம் சிரித்திருக்கும் அல்லது பழங்காலமாக இருந்து வந்த மூட நம்பிக்கையினை சபித்திருக்கும்.


ஆனால் அவர் ஒவ்வொரு இருதயத்தின் வாசற்படியில் நிலைத்திருக்கிறார், வழி விலகிச்செல்ல மறுக்கிறவராக, அவருடைய உண்மைத்துவத்தைக் குறித்ததான கேள்வியோடு நாம் ஒவ்வொருவரும் போரிட்டு சமாளிக்க வேண்டுமென அவர் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்.

## வேதஅறிவுப்போட்டி
## எண் 101ல் வெற்றி பெற்றவர்கள்

| | |
|---|---|
| K. மோகன் | -கொபாளை |
| Mrs. மரகதம்திரவியம் | -கோம்பை |
| R. பவுல் சாமுவேல் | -பிடாரியூர் |
| Mrs. ஏலியம்மாள் | -கடலூர் |
| N. ஜான் செல்லையா | -மதுரை |
| Mrs. மெர்ஸிடக்லஸ் | -கோவை |
| A. ஜோதிகாந்தம் | -போபாறை |
| R. சாமுவேல் | -ஊதியூர் |
| N.S. சங்கரலிங்கம் | -பாண்டி |
| J. ஐசக் | -வ.பேட்டை |
| Mrs. மெல்சிடா | -திண்டுக்கல் |
| P. ரேணுகா | -தென்காசி |
| S. ஜீவிதா | -கோவை |
| N. விமலா | -கோவை |
| Mrs. செல்வக்குமார் | -மதுரை |
| P. ஏசையன் ராஜ் | -கோபி |
| R. கஸ்தூரி | -ஒட்டநத்தம் |
| R. கிப்ஃட் | -ஒட்டநத்தம் |
| M. ராமசந்திரன் | -ஒட்டநத்தம் |
| V.F. சர்லோ | -பாண்டி |
| A.ஆனந்த | -மதுரை |
| J.ஜாய் வாசுகி | -கோவை |
| T.பவுல் | கோவை |
| Mrs.கிரேனாப் விக்டர் | -வதிலை |
| S.பாக்கியராஜ் | -திண்டுக்கல் |
| D.கண்ணன் | -கோவை |
| J.ஜாய்மெர்ஸி | -திண்டுக்கல் |
| S.R.பெரியசாமி | -சேளூர் |
| L.ஸ்டீபன் | -அநல்லூர் |
| S.செல்வகுமார் | -மணவி |
| M.ரத்தினகுமார் | -ஈரோடு |
| N.கமலவேணி | -சென்னை |
| Sis.அரசு கஸ்தூரி | -சேலம் |
| Sis.வளர்மதி | -சேலம் |
| S.சத்தியவாசகன் | -சேலம் |

# தேவன் உங்களை உயர்த்துவார்
# *God May Exalt You*

*-Glory Arjunan*



அன்பு சகோதரிகளே, இப்புத்தாண்டில் தேவன் உங்களை உயர்த்துவார் என வாழ்த்துகிறேன். நிச்சயமாக தேவன் நம்மை உயர்த்துவார். அவருடைய ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப் போவதில்லை. தேவன் நம்மை உயர்த்தும்படி நாம் என்ன செய்ய வேண்டுமென தேவன் நம்மில் எதிர்பார்க்கிறார் என வேதத்தின் உதவி கொண்டு பார்ப்போம்.

**கர்த்தருக்குமுன் தாழ்மைப்படுவோம்:**

ஆம். கர்த்தருக்கு முன் நம்மைத் தாழ்த்துவோம், அவருக்கு முன் பணிந்து குனிந்து முழங்காற்படியிடுவோம். இன்னும் மென்மேலும் உயர்த்தப்பட "நம்முடைய தேவனாகிய கர்த்தரை உயர்த்தி அவர் பாதபடியிலே பணியுங்கள்; அவர் பரிசுத்தமுள்ளவர்"(சங்.99:5). சகோதரியே, இன்று உன்னுடைய கல்வி, உன்னுடைய பட்டம், உன்னுடைய அந்தஸ்து, உன்னுடைய செல்வம், உன்னுடைய அனைத்து ஆசீர்வாதங்களும் யாரால் வந்தது? உன்னுடைய ஞானம், உழைப்பு, இவற்றால் வந்தது என எண்ணுகிறாயோ? இல்லை. நிச்சயமாய் இல்லை. கர்த்தருக்கு முன் உன்னைத் தாழ்த்து.

"தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?" (ரோம.8:32) என்ற வசனத்திற்கேற்ப நமக்கு ஜீவன், சுகம், பெலன், செல்வாக்கு, அந்தஸ்து என எல்லாவற்றையும் அருளி, இப்புத்தாண்டினையும் காணும்படி செய்திருக்கிறார். இது அவருடைய பெரிதான கிருபையல்லவா? இப்பேர்ப்பட்ட நம்முடைய கர்த்தருக்கு முன்பாக நம்மைத் தாழ்த்துவோம். நம்முடைய சுயபெலத்தால் ஒன்றையும் சவதரிக்கமுடியாது என நினைவுகூருவோம். கர்த்தர் ஒருவனை ஆசீர்வதித்தாலொழிய ஒருவனும் ஆசீர்வதிக்கப்படான். நமக்குரியதைக் குறித்து மேட்டிமையாயிராமல் கர்த்தருக்கு முன் தாழ்மைப்படுவோம். பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையளிக்கிறார் (1பேது.5:5). அவர் பாதபடிமுன் பணிவோம் அவரையே உயர்த்துவோம். வரும் நாட்களிலும் அவரால் உயர்த்தப்படுவோம்.

**கீழ்ப்படிந்து தம்மைத்தாமே தாழ்த்துவோம்:**

கர்த்தருக்கு முன் நாமொன்றுமில்லை என அவருக்குமுன் தாழ்மைப்படுவதோடுகூட அவருக்குக் கீழ்ப்படிந்து நம்மை நாமே தாழ்த்துவதும்

அவசியமாயிருக்கிறது. ஆம், நம்முடைய ஆண்டவர், தேவனுடைய மடியிலிருந்தவர் தம்மை தாழ்த்தினார். "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் .......... அடிமையின் ரூபமெடுத்து, மனுஷசாயலானார். சிலுவையின் மரணபரியந்தமும் **கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி**..... எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத்தந்தருளினார்" (பிலி. 2:6-11). இயேசுவானவர் தம்மைத் தாமே தாழ்த்தினார், ஆதலால் தேவனால் உயர்த்தப்பட்டார். நீங்களும், நானும் எப்படியிருக்கிறோம்? சற்றே வேதாகமத்தின் வெளிச்சத்திலே நம்மை நிதானித்து அறிவோம். மனமேட்டிமை, பெருமை, அகந்தை போன்றவைகள் நம்மிடம் காணப்படுகிறதா? நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம் பிசாசின் பிள்ளைகளுக்கு முன் நாம் எப்படி தாழ்ந்து போவது என எண்ணுகிறீர்களா? உங்களுடைய நாமங்கள் ஜீவ புத்தகத்தில் எழுதப்பட்டிருப்பது பற்றி சந்தோஷப்படுங்கள் என்று தான் நமதாண்டவர் சீஷர்களைப் பார்த்துக் கூறினாரேயன்றி பெருமைகொள்ளுங்கள் எனக் கூறவில்லை. "அவர்....... தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல்..... கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்" (பிலி. 2:6-8) என வாசிக்கிறோம். நமதாண்டவராகிய கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே நம்மிலும் இருக்கக்கடவது. நமதாண்டவரே தேவனுக்குக் கீழ்ப்படிந்து அவருடைய சித்தம் செய்தாரென்றால் அவரைப்பின்பற்றுகிற நாம் எவ்வளவு அதிகமாகக் கீழ்ப்படிந்து அவருடைய சித்தம் செய்ய வேண்டும்! நம்முடைய மரணபரியந்தம் கர்த்தருக்குக் கீழ்ப்படிவோம் கீழ்ப்படிவதும், நம்மைத் தாழ்த்துவதும் கடினமாகயிருக்கிறதென்று சொல்வோமானால் நிச்சயமாக உயர்த்தப்படமாட்டோம். தன்னைத் தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்.

**அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருப்போம்:** கிறிஸ்துவை உயர்த்தின தேவன் நம்மையும் உயர்த்தும்படி அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருப்போம். "....... ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" (1பேது. 5:6) என வேதம் கூறுகிறது. கிறிஸ்துவர்களாகிய நமக்கு இவ்வுலக ஜீவியம் எப்போதும் சாதகமாக இருக்கும் எனக் கூறஇயலாது. சிலவேளைகளில் கிறிஸ்தவ ஓட்டத்தில் பிரச்சனைகளும், தோல்விகளும் வரலாம். சமுதாயத்தில் நம்முடைய பக்தியின் ஜீவியத்தையும், உண்மையான நடக்கையினையும் உலகத்தார் பார்த்து பொறுக்கக் கூடாமல் பொறாமை கொண்டு நம்மைக் குற்றப்படுத்திக் கொண்டேயிருக்கலாம். இவ்வாறு இவ்வுலகம் நம்மை குற்றப்படுத்தும்போது, இயேசுவையும் குற்றப்படுத்தியது என்பதை நினைத்து மனத்தாழ்மையை அணிந்து கொள்ளுவோம். வேதபாரகர், பிரதான ஆசாரியர் போன்றவர்கள் இயேசுவைக் குற்றப்படுத்தும் படியே வகைதேடினார்கள். சிலுவையின் கடைசிபரியந்தமும்


பரியாசஞ்செய்தனர். “மற்றவர்களை ரட்சித்தான், தன்னைத் தான் ரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை, இவன் இஸ்ரவேலின் ராஜாவானால் இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கி வரட்டும், அப்பொழுது இவனை விசுவாசிப்போம், தன்னைத் தேவனுடைய குமாரனென்று சொல்லி, தேவன் மேல் நம்பிக்கையாயிருந்தானே; அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும் என்றார்கள்”(மத்.27:42-43). ஆனால் இயேசுவோ, “..... பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார் ........” (லூக்.23:34). நம்மால் இப்படிக்கூறமுடியுமா? இவ்வாறெல்லாம் பொறுமையாக, மனத்தாழ்மையுடன் அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருக்க முடியுமா? தேவன் நம்மைக் குறித்து கொண்டுள்ள சித்தத்தினை நிறைவேற்றும்படி அவருடைய பலத்தகைக்குள் அடங்கியிருந்தால் தான் அவர் நம்மை உயர்த்துவார். ஆம், முடிவில் என்ன நடந்தது? “...... தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, .........எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்”(பிலி.2:9-11). நமக்கு வரும் பிரச்சனைகளில் ‘Prestige Issue’ என்னால் விட்டுக்கொடுத்து தாழ்ந்து போக முடியாது என சொல்வோமானால் மிகுந்த வேதனையடைய வேண்டியிருக்கும் நம்முடைய பிடிவாதம் ஒருபோதும் நமக்கு வெற்றியைக் கொண்டுவராது. “ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத் தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களினும் மேன்மையானவர் களாக எண்ணக்கடவீர்கள்”(பிலி.2:3) என வேதம் கூறுகிறது.

அன்பு சகோதரியே, கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தை நம்மில் இருக்குமானால், கிறிஸ்துவைப் போல தேவனுக்குக் கீழ்ப்படிந்து, நம்மை நாமே தாழ்த்தி, தேவனுக்கு முன்பாக தாழ்மைப்பட்டு அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருக்க முடியும். அப்படியிருக் கும் போது கிறிஸ்துவை தேவன் உயர்த்தியது போல நம்மையும் உயர்த்துவார். “கர்த்தருக்கு முன் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்”(யாக்.4:10). தேவன் தாமே நமக்கு உதவிசெய்வாராக!.

***நீங்கள் இவ்விதழின் வாசகரா?***
***அப்படியானால் உங்களுடைய பங்கு என்ன?***

† மற்றவர்களுக்கு இவ்விதழை அறிமுகம் செய்யலாம்.
† வாசகர்களை தெரிந்து கொண்டு அவர்களுக்கு சந்தா செலுத்தலாம்.
† உங்கள் பகுதியில் சபையாக கூடி இச்செய்திகளை வாசித்துக்காட்டலாம்.
† இவ்விதழின் ஆசிரியரை அழைத்து சுவிசேஷ கூட்டங்கள் நடத்தலாம்.

# ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்
# I Will Give Thee A Crown Of Life



*Bro. Daniel Durairajan, Preacher*
*Church of Christ, A.K.J.Complex, 1st Floor,*
*Marshingpet Main Road, Trichy -1*
*Mobile No: 99446 16926*

**கி**றிஸ்துவுக்குள் சபையானது தேவனுடைய நித்திய நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்டது. **சபை** ஆச்சர்யமான ஒன்று.

தேவனுடைய மறைக்கப்பட்ட **"அநந்த ஞானம்"** (Main fold wisdom) சபையின் மூலமாக தெரியவரும் பொருட்டாகவும்...

**...எல்லாருக்காகவும் தெரியவரும் பொருட்டாகவும்** ஏற்படுத்தப்பட்டது **எபேசி3:10,11,21 'சபை'** யாகும்.

சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாக தலை முறை தலைமுறைக்கும் சதா காலங்களிலும் மகிமை உண்டாவதாக ஆமென் **வசனம் 21** இந்த நித்திய ஆசீர்வாதங்கள் யாவும் உலக தோற்றத்திற்கு முன்பாகவே உறுதியாக்கப்பட்டது **1பேதுரு1:20.**

**"தேவனுடைய நல்வார்த்தைகளையும்" இனிவரும் உலகத்தின் பெலன்களையும்** ருசி பார்த்ததுண்டானால் **எபி.6:5.** அவர்கள் பரலோகத்தின் வேதாகம விளக்கங்களை தியானித்து பார்ப்பார்கள்.

பல. பரலோக ஆசீர்வாதங்களை **வேதாகமம்** வித்தியாசப்பட்ட ஒப்புமை விளக்கங்களில் விவரிக்கின்றது. இவைகள் நம்மை அந்த மேலான நல்ல உலகத்தை வாஞ்சையோடு எதிர்பார்க்க தூண்டுகிறது. அவைகள் என்னென்ன?

**1. ஜீவ விருட்சத்தின் கனியை புசிக்கக் கொடுப்பேன் வெளி.2:7.**

ஆதி ஏதேனில் - நடைபெற்ற திருமணத்தை தான் இன்றைய கிறிஸ்தவம் மறவாமல் நடத்தி நினைவு கூருகிறது. ஆனால் அங்கிருந்த "ஜீவ விருட்சத்தை" மறந்தே போய்விட்டது. நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தைத் தவிர அங்கு வேறொரு **விருட்சம்** (மரம்) இருந்தது. அதற்கு ஜீவனைத் தரக்கூடிய வல்லமை இருந்தது. அதுவே **"ஜீவவிருட்சம்"** (The tree of life). அது பார்க்கக் கூடியதும், தொடக் கூடியதுமான ஒரு மரமாயிருந்தது. ஒருவன் கையை நீட்டி அதை பறித்து சாப்பிட்டு என்றென்றும் வாழ கூடியதாகவும் இருந்தது ஆதி.3:22. ஆதாமும் ஏவாளும், இதற்கு தகுதியற்றவர்கள் என்று நிருபித்த பிறகு, அதை விட்டு (ஜீவவிருச்சத்தை) தேவன் அவர்களை பிரித்து அந்த ஜீவவிருட்சத்துக்கு **"கேருபீன்களை"** காவல் போட்டார் **ஆதி.3:24.**

எவ்வளவு காலம் அது அங்கிருந்தது, பிறகு அதற்கு என்ன சம்பவித்தது? யாருக்கும் எதுவும் தெரியாது.

ஆதியாகமத்திற்கு பிறகு, 64 புத்தகங்களில் இதைப் பற்றி ஒன்றுமே சொல்லப்படவில்லை. ஆனால் **நீதி.11:30, வெளி.2:7-ல்** சொல்லப்பட்டுள்ளது. எப்படியானாலும் பரலோகத்தின் நித்திய திட்டத்தில் இந்த "விருட்சம்" மறக்கப்படவில்லை. இதனுடைய நினைவுகள் வெளிப்படுத்தின விசேஷத்தில் புதுப்பிக்கப்படுகிறது. இப்பொழுது இதை மாம்சக் கண்ணினால் பார்க்கவியலாது. தொடமுடியாது, பூமிக்குரிய மரமல்ல. இது ஒரு ஆவிக்குரிய விளக்க மரமாக சொல்லப்பட்டுள்ளது. ஏதேனில் சொல்லப்பட்ட அந்த விருட்சம் ஆவிக்குரிய விளக்கங்களில் சொல்லப்பட்டுள்ளது **வெளி.2:7.**

சாதாரணமானவர்களும் நல்ல நாட்களை காண வேண்டுமென்று விரும்புவார்கள் **1பேது.3:10.** கிறிஸ்து, ஜீவனை கொடுக்கவும், அது பரிபூரணப்பட வேண்டுமென்றும் வந்ததாகவும் கூறினார் **யோவா.10:10.** "அவர் மரணத்தை பரிகரித்து ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார்" **2தீமோ.1:10.**

மரணத்தின் அதிபதியின் (பிசாசு) அதிகாரத்தை முறியடித்து அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கினார் **எபி.2:14,15.**

அவர் ஒருவரால் தான் சொல்ல முடியும்

**"பயப்படாதே நான் முந்தினவரும் பிந்தினவரும் உயிருள்ளவருமாயிருக்கிறேன். ஆமென் நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்" வெளி.1:17,18.**

ஒரு ஆவிக்குரிய கிறிஸ்தவனுக்கு மகிழ்ச்சியான செய்தி என்னவென்றால், இந்த "**ஜீவவிருட்சம்**" எங்கேயிருக்கிறதோ அங்கே அவனும் இருப்பான். அங்கே கேருபீனின் காவலில்லை, அந்த விருட்சத்தை ஒருவன் பறித்து தின்னலாம்.

மரித்தோரிலிருந்து எழுந்து, அதற்கு தகுதியானவர்கள் மட்டும் இதை பறித்து உண்டு என்றென்றும் வாழுவார்கள். இந்த கனியை புசிப்பவர்களுக்கு மரணமில்லை. ஏனெனில் அவர்கள் தேவ தூதர்களைப் போலிருப்பார்கள். **"மறுமையையும் மரித்தோரிலிருந்தெழுந்திருக்குதலையும் அடையப் பாத்திரராக எண்ணப்படுகிறவர்களோ பெண் கொள்வதுமில்லை பெண் கொடுப்பதுமில்லை.**

**அவர்கள் இனி மரிக்கவுமாட்டார்கள்; அவர்கள் உயிர்த்தெழுதலின் பிள்ளைகளானபடியால் தேவதூதருக்கு ஒப்பானவர்களுமாய், தேவனுக்குப் பிள்ளைகளுமாயிருப்பார்கள்" லூக்கா20:35,36.**

**'ஏதேனில்' (Eden)** இந்த ஜீவ விருட்சம் முதலாவதாக இருந்தது இது ஏற்புடைய ஒரு இடம். ஏனெனில் "**ஏதேன்**" என்றால் **சந்தோஷத்திற்கு ஏற்புடையதான இடம்** என்று பொருள்.

இந்த இரண்டாவது "ஜீவவிருட்சம்" 'பரதீசுவில்' (Paradise) காணப்படுகிறது. "பரதீசு" (Paradise) என்றால் மகிழ்ச்சியின் பூங்கா என்று அர்த்தம்.

**"பளிங்கைப் போல் தெளிவான ஜீவத் தண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டு வருகிறதை எனக்குக் காண்பித்தான் நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இரு கரையிலும், பன்னிரண்டு விதமான கனிகளைத்தரும் "ஜீவ விருட்சம்" இருந்தது அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும்; அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள் வெளி.22:1,2.**

**2. ஜீவ கிரீடத்தை கொடுப்பேன் வெளி.2:10.**

இரண்டாவது, பரலோக ஆசீர்வாதம். ஜீவ கிரீடம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட "கிரீடம்" (Diadema) அல்ல (Diadem) என்றால் பரம்பரையாக இளவரசன் பட்டம் சூட்டப்படுதல். ஆனால் இங்கே சொல்லப்படுவது (Stephanos) இது (Wreath) போன்ற ஒரு மலர் கிரீடம். பழங்கால ஒலிம்பிக் போட்டிகளில் தலையில் சூட்டப்பட்டது (ஒலிவ இலைகளால்) ஆனால் இது நாளடைவில் வாடிப் போய்விடும்.

கிறிஸ்தவனுடைய கிரீடம் அழிந்து போகாதது. "நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம்" 1கொரி.9:25. ஒலிம்பிக் கிரீடம் வாடிப்போய்விடும். ஆனால் **"நாமோ மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுகிறோம்" 1பேது.5:4.**

பரலோக ராஜ்யத்தில் பவுல் அந்த நீதியின் கிரீடத்தை பெற ஆயத்தமாயிருப்பதாக கூறுகிறார் **2தீமோ.4:8.**

**3. மன்னாவைப் புசிக்கக் கொடுப்பேன் வெளி.2:17**

மூன்றாவது, ஜீவனுக்கேதுவான ஆசீர்வாதம் மன்னா. இது வனாந்தரத்தில் பயணம் செய்து அலைந்து திரிந்த இஸ்ரவேலர்களோடு தொடர்புடையது. தேவன், அற்புதமாக இவர்களை போஷிக்காமலிருந்திருந்தால் இந்த ஜனங்கள் பட்டினியால் செத்து போயிருப்பார்கள். பாளையமெங்கிலும் பனி பெய்த பொழுது அந்த பனியுடன் "மன்னா" என்ற பொருளும் விழுந்து கிடந்தது **எண்.11:9.** இதனுடைய ருசியானது "தேனிட்ட பனியாரத்திற்கு ஒப்பாயிருந்தது" **யாத்.16:31.** இந்த உணவின் மூலமாக தேவன் தமது ஜனத்தை 40 வருடங்கள் ஜீவனோடு காத்து வழி நடத்தினார். இதை சங்கீதக்காரன் **சங்.78:25-ல்** "தூதர்களின் அப்பம்" என்கின்றார். அதாவது தேவன் இவர்களுக்கு தூதர்கள் மூலமாக அப்பத்தை தந்தார். மாமிசத்துக்குரிய எபிரெயர்களுடைய மன்னா, மரணத்துக்கும் ஜீவனுக்கும் வேறுபட்டுள்ளதாயிருந்தது. ஆவிக்குரிய மன்னாவை மீட்கப்பட்டோர் புசித்து என்றென்றும் மரியாமலிருப்பார்கள் **வெளி.2:17.**

**4. வெள்ளைக் குறிக்கல்லைத் தருவேன் வெளி.2:17.**

பரலோக ஆசீர்வாதங்களின் நான்காவது காரியம் ஒவ்வொரு விசுவாசிக்கும் இயேசு, "வெண்குறிக்கல்லை" கொடுப்பவராய் இருக்கிறார் **வெளி.2:17.**

ரோமர்களுடைய குற்ற விசாரணையில், குற்றத்தின் தீர்ப்பானது "கருப்புக் கல்லில்" எழுதப்படும் அதே சமயம் "குற்றமற்ற"வன் "நிரபராதி" என்பதை "வெள்ளைக் கல்லில்" எழுதுவார்கள்.

பரலோகத்தில் இது உண்மை **"ஆவியின்படியே வாழ்கிறவனுக்கு ஆக்கினைத் தீர்ப்பு"** கிடையாது **ரோ.8:1.**

இந்த "வெண்கல்" ஒவ்வொருவருடைய தனிப்பட்ட இரட்சிப்பைப் பற்றி அறிவிக்கிறது. ஒரு முழு சபைக்கும் இந்த வெண்கல்லைத்தராமல். ஒவ்வொரு தனிப்பட்ட விசுவாசிக்கும் இதைத் தருவேன் என்கிறார்.

இந்த கல்லில் பொறிக்கப்படக்கூடிய ஆசீர்வாதங்களை ஒவ்வொரு தனிப்ட்டவரும் முழுமையாக பெற்றுக் கொள்ளமுடியும். பரலோகத்தில் ஏதோ கொஞ்சமல்ல, அல்லது பகுதியுமல்ல முழு ஆசீர்வாதம்.

"உங்கள் செய்கைகளின் பலனை இழந்து போகாமல் பூரண பலனைப் பெறும்படிக்கு **2யோவா.8.**

இரட்சிப்பை பெற்று முடிவில் பரலோகத்துக்குப்போகும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் "ஆத்தும ஆதாயப்பணியின் வெற்றிவீரன்" **1கொ.3:14.** ஆண்டவருடைய வருகையின் போது அந்த ஆத்தும ஆதாயப் பணிக்காக "மகிழ்ச்சியின் கிரீடத்தை" அவன் பெறுவான் அல்லது "மகிழ்ச்சியின் கிரீடமாக" அவருக்கு அவன் இருப்பான்.

பவுல் தெசலோனிக்கேயர்களைப் பார்த்து சொல்லுகிறார், **"எங்களுக்கு நம்பிக்கையும் சந்தோஷமும் மகிழ்ச்சியின் கிரீடமுமாயிருப்பவர்கள் யார்? நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது அவருடைய சந்நிதானத்தில் நீங்களல்லவா அப்படியிருப்பீர்கள். நீங்களே எங்களுக்கு மகிமையும் சந்தோஷமுமாயிருக்கிறீர்கள் 1தெச.2:19,20.**

**5. வெண் வஸ்திரத்தை தரிப்பேன் வெளி.3:5.**

பரலோகத்திலிருப்போர் சுத்தமான வாழ்க்கை வாழவேண்டும். அதற்கு ஒப்புமையாக அவனுக்கு வெண்வஸ்திரம் தரிக்கப்படும் **வெளி.3:5.** தன்னை பார்க்க இயலாதவனுடைய வஸ்திரத்தின் அழுக்குகளை களைந்து போட்டு, பார், நான் உன் அக்கிரமத்தை உன்னிலிருந்து நீங்கச் செய்தேன் **சகரியா3:4.** கிறிஸ்தவர்கள் மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க தம்மை சுத்திகரித்துக் கொண்டு... **2கொ.7:1** வாழ்பவனுக்கு பரலோகத்தில் ஒரு வஸ்திரம் கொடுக்கப்படுகிறது, அது "கறையற்ற தூய்மையான" வஸ்திரம். கர்த்தர் இவர்களைக் குறித்து வெட்கப்படமாட்டார். ஏனெனில், அவர்கள் "பாத்திரவான்களான" படியினால் "வெண்வஸ்திரந்தரித்து என்னோடேகூட

நடப்பார்கள்" **வெளி.3:4.** "பாத்திரவான்கள்" என்றால் எல்லாவற்றிற்கும் தகுதியானவர்கள் "நம்முடைய நீதி அழுக்கடைந்த கந்தை" **ஏசா.64:6.** நம்மை அவர் நீதியின் கிரியையினால் இரட்சிக்காமல், தமது இரக்கத்தின்படியே **தீத்து3:5.** நம்மை இரட்சிக்கிறார். நாம் எவ்வளவோ கட்டளைகளுக்கு கீழ்ப்டிந்தாலும் "அப்பிரயோஜனமான வேலைக்காரன்" என் கடமையை மட்டும் செய்தேன் **லூக்.17:10** என்று சொல்லவேண்டும். தம்முடைய இரட்சிப்பை ஒருவன் சம்பாதித்ததைக் குறித்து மேன்மை பாராட்ட ஏதுவில்லை **எபே.2:8,9** ஏனெனில் அது தேவனுடைய ஈவு (Gift).

**முடிவுரை:** நீங்கள் ஒருவேளை ஆண்டவருடைய சபையில் அங்கத்தினராக இல்லாதிருந்தால், நீங்கள் உடனடியாக அங்கத்தினராகுங்கள். நீங்கள் ஒருவேளை அவிசுவாசமுள்ள (Unfaithful) அங்கத்தினராக இருந்தால் ஆதியில் கொண்டிருந்த அன்புக்குத் திரும்புங்கள் **வெளி.2:4,5.**

ஆட்டுக்குட்டியானவருடைய கல்யாண விருந்தில் நீங்களும் இருக்கவேண்டும் **வெளி.19:7,8,9.**

**"ஆட்டுக்குட்டியானவரின் கலியாணவிருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள்".**

## வேதஅறிவுப்போட்டி
## எண் 101-ன் விடைகள்

| | | |
|---|---|---|
| *1. ஆசாரியர்களாகிய உங்களைக்குறித்து* | - | *மல்1:6* |
| *2. அடைந்திருக்கிறார்கள்* | - | *ரோம11:7* |
| *3. ஐயோ!* | - | *ஆப2:9* |
| *4. சுயாதீனமுள்ளவருக்கே* | - | *கலா.4:31* |
| *5. செப்பனியா* | - | *செப்.3:19* |
| *6. புருஷனிலிருந்து* | - | *1கொ.11:8* |
| *7. ஆபகூக்* | - | *ஆப1:13* |
| *8. தம்முடைய குமாரனைத்* | - | *கலா.4:5* |
| *9. செப்பனியா* | - | *செப்.1:7* |
| *10. அதிக மகிமையுள்ளதாயிருக்குமே* | - | *2கொ.3:9* |

# தெரிந்து கொள்ளுங்கள்!

### நாயீன்

கலிலேயா மாகாணத்தில், தாபோர் மலைக்கு தெற்கே இரண்டு மைல் தூரத்தில், கலிலேயா கடலுக்கு சற்று தென்மேற்கு திசையில் இவ்வூர் அமைந்துள்ளது. இயேசு இந்த ஊரில்தான் மரித்துப்போன ஒரு விதவையின் மகனை உயிரோடெழுப்பினார் (லூக்கா7:11,18).

*- Bro.Ravi Asir*

## கேள்வியும் வசன ரீதியான பதிலும்

1. **எது சத்தியம்?** - தேவனுடைய வசனமே சத்தியம் - (யோவான்17:17)
2. **ராஜரீக பிரமாணம் எது?** - உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக - (யாக்கோபு2:8)
3. **தேவன் நமக்குச் செய்த வாக்குத்தத்தம் எது?** - நித்திய ஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம் - (1யோவான்2:25)
4. **கிறிஸ்துவின் பிரமாணத்தை எப்படி நிறைவேற்ற முடியும்?** - ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து - (கலாத்தியர்6:2)
5. **அன்பை எப்படி நாம் அறிந்துகொண்டோம்?** - அவர் தம்முடைய ஜீவனை நமக்காக கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்துகொண்டோம் - (1யோவான்3:16)
6. **எது அன்பு?** - நாம் அவருடைய கற்பனைகளின்படி நடப்பதே அன்பு - (2யோவான்6)
7. **பிதாவையும் குமாரனையும் உடையவன் யார்?** - கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன் - (2யோவான்9)
8. **எது நித்திய ஜீவன்?** - ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன் - (யோவான் 17:3)
9. **முதல்முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்கு என்னபேர்வழங்கிற்று?** - கிறிஸ்தவர்கள் - (அப்போஸ்தலர்11:26)
10. **நியாயப்பிரமாணம் சொல்லுகிறதெல்லாம் யாருக்கே சொல்லுகிறது?** - நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டிருக்கிறவர்களுக்கே சொல்லுகிறதென்று அறிந்திருக்கிறோம் - (ரோமர்3:19)

## நடப்புச் செய்திகள்

- மகாத்மா காந்தியின் 61-வது நினைவு தினம் நாடு முழுவதும் அனுசரிக்கப்பட்டது.
- நாடு முழுவதும் 1000 பாலிடெக்னிக் கல்லூரிகளை மத்திய அரசு தொடங்கவுள்ளது.
- 20 கோடி பேர் ஏழ்மையில் சிக்குவர். உலகம் முழுவதும் இந்த ஆண்டில் 5கோடி பேர் வேலை இழக்கலாம். சர்வதேச தொழிலாளர் அமைப்பு தகவல்.
- மெட்ரோ ரயில் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்.
- சீனாவில் நடைபெற்ற சர்வதேச கருத்தரங்கில் ராமநாதபுரம் மாணவர் செய்யது சுல்தான் அலாவுதீன் சாதனை.

# சத்திய வார்த்தையில் சரித்திரம் -16

சரித்திர ஆய்வு

## இயேசுகிறிஸ்து - JesusChrist

John S.Nathan, Gospel Minister
Christian City Church of Christ, (Minjur) -601 203, S.INDIA.
Mobile: 94444 43378



மறக்கமுடியாத, மறைக்க முடியாத மாபெரும் சரித்திர நாயகன். உலகவரலாற்று அடிப்படையில் பேரறிஞர்களின் மனப்பூர்வமான எண்ணங்களில் **இயேசுகிறிஸ்வை** மையமாக வைத்தே சரித்திர நிகழ்வுகளை ஆதாரமாகக் கொண்டு, அவரின் திருஅவதாரத்திற்கு முன்பும், பின்புமாக தொகுத்து குறிப்பிடுவது ஓர் தனிச்சிறப்பாகும். ஏனெனில் அண்ணலின் மனித உருவேற்பினை குறித்து எண்ணற்ற தீர்க்கதரிசிகளால் பற்பல காலத்தில் வெவ்வேறான இடத்தில், மாறுபட்ட சூழ்நிலையில் வாழ்ந்த அரசர் முதல் ஆடு மேய்ப்பவன் வரையில் ஒருவரை ஒருவர் காணாமலும், கேளாமலும் இருந்த போதிலும் இம்மியளவும் தவறின்றி கூறிய வண்ணமே, அவர் குறிப்பிட்ட இடத்தில் அவதரித்து மானிடர்களிடையே, மானிடனாய், மானிடர்களுக்காகவே வாழ்ந்து, தனது இன்னுயிரை ஈனமக்களுக்காக சிலுவையில் ஒப்புக்கொடுத்தார். அவர் வாழ்ந்த போது ஒருவரும் அவரின் மீது சிறு குறையோ, குற்றமோ காணஇயலவில்லை. அவர் போதித்ததை சாதித்தார், சாதித்தையே போதித்தார். அவரிடம் வந்தவர்கள், கேட்டவர்கள் அனைத்தையும் பெற்று மகிழ்ந்து சென்றனர்.ஆனால் ஒரு சிலர் மட்டுமே அவரை தவறாக புரிந்துகொண்டு மனித இனம் ஏற்றுக்கொள்ள இடமில்லாவகையில் பேசியும், எழுதியும் வந்தனர், வருகின்றனர். அவர் இனியும் வருவர்.

சமய நம்பிக்கையற்றவர்களின் வாழ்வில் - எல்லா வரலாற்று உண்மையுடன் வாழ்ந்தவர் - **இயேசுவே.**

### இயேசுவை பற்றி பெர்டிரான்ட்ரஸ்ஸல்:

இங்கிலாந்தில் உயர் குடியில் பிறந்தவரும், 1846-52 மற்றும் 1865-66-ல் பிரதம மந்திரியுமான ஜான்ரஸ்ஸல் அவர்களின் பேரனான பெர்டிரான்ட்ரஸ்ஸல் (Bertrand Russel) மே18, 1872-ல் இங்கிலாந்தில் பிறந்தார். பிரிட்டீஷ் தர்க்க சாஸ்திர நிபுணரும் மற்றும் தத்துவ ஞானியும் கேம்பிரிட்ஜ் பல்கலைகழகத்தில் கணிதமும், தத்துவ இயலும் கற்ற இவருக்கு 1950-ம் ஆண்டில் இலக்கியத்திற்காக நோபல் பரிசு கிடைத்தது. ஆனால் இவரின் நன்கு மேம்படுத்தப்பெற்ற மெய்ஞான கோட்பாடு ஆகியவை வெகுவாகப் பாதித்தன

ஏனெனில் அவரின் "நான் ஏன் கிறிஸ்தவன் அல்ல" (Why I am not a Christian) இயேசு சரித்திர பிரகாரம் வாழ்ந்தார் என்பது சந்தேகத்திற்குரியது. அப்படியே அவர் வாழ்ந்திருந்தாலும், அவரைத் குறித்து நமக்கு ஒன்றும் தெரியாது என்றதுதான் நமக்கு நகைப்பிற்குரியதாகும். ஏனெனில் உலகின் தத்துவ ஞானிகளின் தந்தை எனப்படும் கிரேக்கத்தின் நன்கொடையும், உலகின் தத்துவ ஞானிகளின் தந்தை என்றழைக்கப்பட்ட சாக்ரடீஸ் (கி.மு.479 - 399) அவரின் சீடர் பிளேட்டோ (கி.மு 428-347) அரிஸ்டாட்டில் மற்றும் கணக்கற்றவர்களின் வாழ்வை நன்கு அறிந்தவரின் இவ்வாறான கூற்று நம்மை திகைக்க வைக்கிறது. "பல கற்றும் இவரை நான் என்னென்பது! இயேசுவை பற்றிய உண்மைகள் கட்டுக்கதையோ, கற்பனையோ அல்லவே அல்ல பவுலடியார் சொன்னதுபோல "இது ஒரு மூலையிலே நடந்த காரியமல்ல" (அப்.26:26). உலகின் நடுப்பகுதியில் நடைபெற்றது. இவர்களைப் போன்றவர்களை கண்டு, கேட்டறிந்த பவுலடியார் (உலக) ஞானிகளுடைய ஞானத்தை நான் அழித்து, புத்திசாலிகளுடைய புத்தியை அவமாக்குவேன்" 1கொரி.1:19. ....இவ்வுலகத்தின் ஞானத்தை தேவன் பைத்தியமாக்கவில்லையா? (வசனம்20). தேவ ஞானத்துகேற்றபடி உலகமானது சுயஞானத்தினாலே தேவனை அறியாதிருக்கையில் பைத்தியமாகத் தோன்றுகிற பிசங்கத்தினாலே அவர்களை இரட்சிக்க தேவனுக்குப் பிரியமாயிற்று (வசனம்21). தேவனுடைய பைத்தியம் என்னப்படுவது மனுஷனுடைய ஞானத்திலும் அதிக ஞானமாயிருக்கிறது (வசனம்24). ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்து கொண்டார் (வசனம்27).


உலகெங்கும் வாழ்ந்த பரிசுத்தவான்களும், தற்போது வாழுகின்ற தேவபிள்ளைகளும், இனிவாழப்போகிற, தெரிந்துகொள்ளப்பட இருக்கிறவர்களும் விசுவாசத்தின் **ஜீவகிரீடமாய்** விளங்கும் பவுலடியார் கிறிஸ்துவுக்காவே வாழ்ந்த வாழ்வும், பட்டபாடுகளும், அவர் ஆற்றிய பேருறைகளும் எழுதிய ஆவிக்குரிய பல நிருபங்களும் கிறிஸ்தவர்களின் விசுவாச வாழ்வின் வளர்ச்சிக்கு அடித்தளமாக, ஆவிக்குரிய சபையின் தூணாக விளங்கிவை, யாரும் மறக்க முடியாது. குறிப்பாக யூதரல்லாத ஏனைய மக்களின் இரட்சிப்புக்காக அவரின் சீரிய வாழ்வும், ஊழியமும் நமக்கு நாளும் பயனளிக்கின்றது. அவரின் கடைசி நாட்களில் (கி.பி60-65/66) பற்பல இன்னல்களுக்கிடையே அவர் ஆற்றிய அருந்தொண்டுகள், அதன் பயனாக அடைந்த சிறை வாழ்வு இறுதியாக நீரோவினால் நிறைவேற்றப்பட்ட சிலுவை மரணம்.

**பொர்க்கியு பெஸ்து**

கி.பி 60-ல் ரோம தேசாதிபதியாகிய (Roman Procurator) பேலிக்ஸ் (சந்தோஷம்) என்பவனுக்கு பதிலாகப் பெஸ்து தேசாதிபதியாக வந்தான் (அப்.24:27).. இவன் தேசாதிபதியாக வந்து, மூன்று நாளான பின்பு செசரியாவிலிருந்து எருசலேமுக்கு (60 மைல் தூரம்) அங்குள்ள பிரதான ஆசாரியரையும், யூத (மத) தலைவர்களையும், தான் வழிபடவும் சென்றான்

(அப்.25:1-7). யூத தலைவர்கள், பவுல் செசரியாவிலிருந்து எருசலேமிற்கு (வரும் வழியில் பவுலை கொன்றுவிட) விரும்பினர் (வசனம்3). ஆனால் பெஸ்து அவர்களின் விருப்பத்தை தள்ளி, அவர்கள் பவுலை செசரியாவில் சந்திக்கட்டும் என்றான்.

(Josephus) யோசபஸ் என்ற சரித்திர ஆசிரியரின் குறிப்பின்படி பெஸ்து சிறந்த நிர்வாகி (யூதர்களின் ஆக்கக் கூறான எண்ணங்களை பேலிக்ஸ் தன்னுடைய திறமையற்ற நிர்வாக சீர்கேட்டினால் பதவியை இழந்த பின்பு) பெஸ்து அதிபதியானான் (அப்.25:1). பெஸ்து தனக்கு முன்னோடிகளையும், தனக்கு பின்னோடிகளையும் விட சிறப்பானவனாகவும் பவுலடியாருக்கு நன்மை செய்ய உறுதியுடையவனாகவும் விளங்கினான். 2 ஆண்டுகள் சிறைப்பட்ட பவுலை விடுவிக்க எண்ணி, பவுலை நியாயம் விசாரிக்க எருசலேமுக்கு போகிறாயா என்றதற்கு பவுல் யூதர்களால் நடுவழியில் ஏற்படும் கொடும் துன்பத்தை அறிந்தும், தான் ரோம குடிமகனானதினால் (அக்காலத்தில் ரோம குடியுரிமை பெற்றவர்கள் கௌரமாக கருதப்பட்டனர். அவர்களை நியாயம்விசாரிக்காமல் எந்த தண்டனையும் அளிக்கக் கூடாது ) ஆதலால் ... "பவுல் நான் இராயருடைய நியாயசனத்துக்கு முன்பாக (ரோம உயர் நீதி மன்றத்தில் ) நிற்கிறேன். அதற்கு முன்பாக நான் நியாயம் விசாரிக்கப்படவேண்டியது (அப்.25:10) என்றான். ஏனெனில் எருசலேமிலிருந்த யூதர்கள் அவனை (பவுலை) சூழ்ந்து நின்று அவர்களால் (நி) ரூபிக்கப்படாத அநேகம் கொடிய குற்றங்களை அவன் மேல் சாட்டினார்கள் (வசனம்7). வீண்குற்றச்சாட்டுகளுக்கு பதிலாக நான் (பவுல்) யூதருடைய 1.நியாயபிரமாணத்துக்காகிலும் 2. தேவாலயத்துக்காகிலும் 3. இராயருக்காகிலும் விரோதமான ஒரு குற்றமும் செய்யவில்லை என்றான் (வசனம்8). பவுலடியார் உண்மையான கிறிஸ்துவின் ஊழியராக மட்டுமின்றி சட்டம், ஒழுங்கை விரும்பினவராகவும் அதனை அனைவரும் கைக்கொள்ள வேண்டுமென விரும்பினார் (ரோம.13:1-8, 1தீமோ.2:1,2). அரசுக்கும், அதின் அதிகாரத்திற்கும் அடிபணிந்து அரசர்களுக்காக ஜெபித்தவரவர். இங்கு இராயன் (அப்.25:8,10,11,21,25 மற்றும்26-32) என்று குறிப்பிட்டது அப்போது ஆட்சி செய்த வந்த நீரோ என்பவன் இராயன் (Roy, இராய், இராயல் Royal என்ற வார்த்தையை சிந்தியுங்கள்




NERO - நீரோ

ரோம கடைசி மன்னன்
நீரோவின் உருவப்படும் ரோமானிய தேசிய
அருங்காட்சியகத்தில் உள்ளது. ரோமாபுரி.

*-தொடர்ச்சியை அடுத்தமாதம் எதிர்பாருங்கள்*

சிறுவர் பகுதி

# ஏன் உங்களுக்கு விசுவாசமில்லாமற்போயிற்று?



**வேத வாசிப்பு: மாற்கு4:35-41**

*Bro. K.MOHAN*
*281/ Opp Power Office,*
*B.Komarapalayam -638 183*
*Mobile No: 93642 02750*

என் அருமைப் பிள்ளைகளுக்கு இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்று விசுவாசத்தைக்குறித்து பார்ப்போம். மேற்கண்ட வேதபகுதியில் இயேசு தம்முடைய சீஷர்களுடன் படகிலே செல்வதை வாசிக்கிறோம். அப்பொழுது பலத்த சுழல்காற்று உண்டாகி, படவு நிரம்பத்தக்கதாக, அலைகள் அதின்மேல் மோதிற்று. அப்பொழுது இயேசு கப்பலின் பின்னணியத்தில் அவர் தலையணையை வைத்து நித்திரையாயிருந்தார். அவர்கள் சற்றும் யோசிக்காமல் அவரை எழுப்ப ஆரம்பித்தனர். நீங்களா இருந்தா அப்படி செய்திருப்பீர்களா?

எப்படி எழுப்பினார்கள் தெரியுமா? போதகரே, நாங்கள் மடிந்துபோகிறது உமக்குக் கவலையில்லையா என்று எழுப்பினார்கள். அவர்களை சிருஷ்டித்த கர்த்தர், உடன் இருந்தும் அவர்களுக்கு நம்பிக்கை வரவில்லை என்ன ஆச்சரியமாக இருக்கிறது பார்த்தீர்களா? நாமும் கூட சில வேளைகளில் அப்படித்தான் மாறிவிடுகிறோம். நான் உங்களை விட்டு விலகுவதுமில்லை உங்களை கைவிடுகிறதுமில்லை என்று கர்த்தர் சொல்லிய வசனத்தை மறந்தவர்களாக போய்விடுகிறோம். அதைப்போல சீஷர்கள் மறந்துவிட்டார்கள். ஆகையால் அவர்கள் பயந்துபோய் போதகரே, என்று அவரை எழும்ப ஆரம்பித்தனர்.

அவர் எழுந்து, காற்றை அதட்டி, கடலைப்பார்த்து; இரையாதே, அமைதலாயிரு என்றார். அப்பொழுது காற்று நின்றுபோய், மிகுந்த அமைதல் உண்டாயிற்று. "அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும்" என்று சங்கீதம்33:9-ல் வாசிக்கிறபடி அவர் சொன்னபடி ஆயிற்று. அவர் அவர்களைப் பார்த்து என்ன சொன்னார் தொயுமா? ஏன் இப்படிப் பயப்பட்டீர்கள்? ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற்போயிற்று என்று கேட்டார். நாமும் இயேசு நம்மோடு இருப்பதை மறந்து பயந்தோம் என்றால் நம்மையும் பார்த்து இப்படித்தான் கேட்பார். "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்" (எபி.11:6).

**மனப்பாட வசனம்**

"விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது" - எபிரெயர்11:1.

# வேத அறிவுப் போட்டி எண். 102

**போட்டியாளர்கள் கவனத்திற்கு,**

கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25ம்தேதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.

1. கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார் என்ற தீர்க்கன் யார்?
2. எங்கள் புறம்பான மனுஷனானது நாளுக்கு நாள் என்ன செய்யப்படுகிறது என்கிறார் பவுல்?
3. கள்ளத்தராசும் கள்ளப்படிக் கற்களுள்ள பையும் இருக்கும்போது, அவர்களைச் சுத்தமுள்ளவர்களென்று எண்ணுவேனோ? என்று கர்த்தர் எந்த தீர்க்கன் மூலம் பேசினார்?
4. ஞானவான்கள் எதைச் சுதந்தரிப்பார்கள், மதிகேடரோ என்னத்தை அடைவார்கள்?
5. பேதுருவோடு முகமுகமாய் எதிர்த்த அப்போஸ்தலன் யார்?
6. கர்த்தர் எளியவர்களின் விண்ணப்பத்தைக் கேட்கிறார், கட்டுண்ட தம்முடையவர்களை அவர் என்ன செய்யார்?
7. சுபாவக் கிளைகளைத் தேவன் தப்பவிடாதிருக்க, உன்னையும் தப்பவிடமாட்டார் என்று எச்சரிக்கையாயிரு என்று பவுல் எந்த சபையாருக்கு எழுதுகிறார்?
8. உயர ஏறும் மனுஷனுடைய ஆவியையும், தாழப் பூமியிலிறங்கும் மிருகங்களுடைய ஆவியையும் அறிகிறவன் யார், என்று எழுதிய ஆசான் யார்?
9. என் மந்தையும் என் மேய்ச்சலின் ஆடுகளுமாகிய நீங்கள் யார் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்?
10. இவன் இனி உயிரோடிருக்கிறது தகாதென்று சொல்லி யாருக்கு விரோதமாகக் கூக்குரலிட்டார்கள்?

"அவர் மரித்தோரின் தேவனாயிராமல், ஜீவனுள்ளோரின் தேவனாயிருக்கிறார்; எல்லாரும் அவருக்குள் பிழைத்திருக்கிறார்களே என்றார் - லூக்கா20:38

Owned and published by B.Arjunan from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu - 624 202 and printed by R.Sathiyamoorthy at Bharathi Press14/13/24 melamanthai street, Batlagundu - 624 202.
Editor: B.Arjunan.

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2009-2011
Posted
at Batlagundu Post Office
on 10th Feb.2009.

BATLAGUNDU CHURCH OF CHRIST
*MEETS HERE*
17-2-102 D/5, RAJAN NAGAR, BATLAGUNDU-624 202,
DINDIGUL DISTRICT, S.INDIA.
Phone : 04543 263278, Mobile: 94435 58041
e-mail: thewordofchrist@sancharnet.in

ஆராதனை நேரம் ஞாயிறு காலை 8.30 மணி
தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ள
யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்

உங்கள் வானொலியில்
இலங்கை ஆசிய சேவை SW 25 மற்றும் 41 மீட்டரில் ஒவ்வொரு
புதன் மாலை 5.45 முதல் 6.00 மணி வரை கேளுங்கள் மேலும்

உங்கள் தொலைக்காட்சியில்
TAMILAN TV - Every Monday 6.00 - 6.15 a.m
IMAYAM TV - Every Tuesday 6.30 - 6.45 a.m
IMAYAM TV - Every Thursday 6.15 - 6.30 a.m

மாத இதழ் மற்றும் வேதபாடம்
தேவைக்கு உடனே ரூ.15/-
அனுப்பி பெற்றுக்கொள்ளவும்

டிவி மற்றும் ரேடியோவில் வெளி வந்த
தேவ செய்திகள் அடங்கிய சிடி மற்றும்
டிவிடிக்கள் தேவைப்படுவோர் ரூ.100/-
அனுப்பி பெற்றுக்கொள்ளவும்

அனைத்து
தொடர்புக்கும்

Monthly Magazine

To

*If undelivered please return to:*
From

Editor
THE WORD OF CHRIST
P.O.Box-5
Batlagundu - 624 202
S.INDIA.